# *புனித வின்சென்ட் தே பவுல் (1581 – 1660)*

இவருடைய பெற்றோர் ஏழைகள். பிரான்சிஸ்கன் குருக்களிடம் இவர் கல்வி பயின்று, நான்கு ஆண்டுகளில் மிக மிக தேர்ச்சி பெற்றார். தம் மக்களுக்குக் கல்வி கற்பிக்க ஒரு பணக்காரர் இவரைத் தேர்ந்தெடுத்தார். கல்வி கற்பித்துக் கொண்டு பெற்றோருக்குச் சுமையாய் இராமல் உயர்கல்வி பயின்றார். வேத சாஸ்திரம் கற்று குருப்பட்டம் பெற்றார்.

இவர் 1605-ஆம் ஆண்டில் மார்சேய் நகரிலிருந்து நர்போன் நகருக்குக் கப்பலில் புறப்பட்டார். ஆப்பிரிக்க கடலில் கொள்ளைக்காரர்கள் இவரைப் பிடித்து அடிமை ஆக்கி தூனிஸ் நகருக்குக் கொண்டு சென்றார்கள். இரண்டு ஆண்டுகளாய் இவர் அடிமையாக இருந்தார். தேவ உதவியால் தப்பித்து உரோமைக்குப் போய் சற்று பின்னர் பிரான்ஸ் நாட்டுக்குத் திரும்பினார். அங்கு பிரபு ஒருவரின் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தும் சிறைகளில் சேவை செய்தும் வந்தார். 1617-ல் இவர் ஊர் ஊராய்ப் போய் பிரசங்கம் செய்யத் தொடங்கி, 1625-ல் ஒரு புது சபையை நிறுவினார்.

இவர் செய்த சேவைகள் அனைத்தையும் எடுத்துக் கூறுவது முடியாத காரியம். அன்பே இவரது பிரதான புண்ணியம். ஏழைகளுக்கு உதவி செய்யும்படி பணக்காரப் பெண்களிடம் சமூக உணர்ச்சியைத் தூண்டி எழுப்பினார். அவர்கள் தந்த பெருந்தொகையைக் கொண்டு நகரின் மருத்துவமனையை நடத்தினார். வீடின்றி இருந்த ஆயிரமாயிரம் மக்களுக்கு பாதுகாப்பு இடம் கொடுத்தார். பைத்தியக்காரர்களுக்கும், தொழு நோயாளிகளுக்கும் மனைகள் அமைத்தார். இளம் பெண்களைக் கெடுக்கத் தேடிய இராணுவத்தினர் கையிலிருந்து காக்கும்படி பல நூறு பெண்களுக்கு கன்னியர் மடங்களில் உறைவிடம் பெற்றுக் கொடுத்தார். அனைவருக்கும் சத்துணவு கொடுக்க ஏற்பாடு செய்தார். குடியானவர்களுக்கு விதைகளும், பணமும் கொடுத்தார். ஆப்பிரிக்காவில் இருந்த 30 ஆயிரம் கிறிஸ்தவ அடிமைகளுக்கு ஆன்ம சேவை செய்ய தன் சபைக் குருக்களையும் சகோதரிகளையும் அனுப்பினார். 60 லட்சம் டாலர்கள் செலவழித்து 1200 அடிமைகளை மீட்டார். அவர் தம்மீது நம்பிக்கை வைக்காது தேவ பராமரிப்பு மேல் நம்பிக்கை வைத்தார். இவர் தாழ்ச்சி நிறைந்தவர். எனவே புகழ்மொழிகளை விரும்பவில்லை. வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது கடவுளோடு ஒன்றித்திருப்பார்.

**சிந்தனை:**

ஏழைகளை நேசித்திருப்பவர்கள் அச்சமின்றி சாவை எதிர்நோக்கலாம். பொறாமையைத் தவிர்க்க விழிப்பாய் இருங்கள். ஏனெனில் அது சகோதர அன்பை அழிக்கத் தேடுகிறது. (புனித வின்சென்ட் தே பவுல்)

**செபம்:**

ஆண்டவரே, இப்புனிதரைக் கண்டு பாவிக்க துறவிகளையும், இல்லற விசுவாசிகளையும் தூண்டும்.